சட்டசபை செய்திகள்

உள்ளாட்சி தேர்தலில்

விடுபட்ட வாக்காளரை சேர்க்க ஏற்பாடு!

சட்டசபையில் அமைச்சர் கோ.சி.மணி தகவல்!!

சென்னை, ஜூன். 2-

உள்ளாட்சி தேர்தலில் விடுபட்ட வாக்காளரை சேர்க்க ஏற்பாடு செய்யப்படும் என்று சட்ட சபையில் அமைச்சர் கோசி. மணி கூறினார்.

1996-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி, நகராட்சி திருத்த மசோதா மீது சட்டசபையில் நேற்று (சனிக்கிழமை) விவாதம் நடந்தது.

தேர்தல் தேதி

ஜி.பழனிச்சாமி (இந்திய கம்யூ):- முன்பு ஆட்சி பொறுப் பில் இருந்தவர்கள் 5 ஆண்டு களாக தேர்தல் நடத்தாததற் காக காரணம் கண்டுபிடித்து வழக்கு தொடர்ந்ததை அடுத்து பிற்படுத்தப்பட்டவர் களுக்கு இடஒதுக்கீடு இன்றி உள்ளாட்சி தேர்தலை நடத்த முடிவு செய்திருப்பது சரி யானது. நான் வரவேற்கிறேன். 5 ஆண்டுகளாக தேர்தலை நடத்த முடியாதவர்கள் இன்று எதிர்க்கிறார்கள். உள்ளாட்சி தேர்தல் தேதியையும் அறிவிக்க வேண்டும்.

திருநாவுக்கரசு (அ.தி.மு.க):- உள்ளாட்சி தேர்தலில் கிராமங் களில் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் பேர் வெற்றி பெறுவார் கள் என்றாலும், மாநகராட்சி, நகராட்சி தேர்தலில் பிற்படுத் தப்பட்டவர்கள் அதிகம் பேர் வர இயலாத சூழ்நிலை இருக் கிறது. எனவே தேர்தலை உடனே நடத்த வேண்டும். பிற் படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடும் வேண்டும்.

பிரதிநிதிகள்

வி.கே.லட்சுமணன் (தமா. கா):- கடந்த ஆட்சியில் ஆளும் கட்சியினர் விருப்பப்படி வார்டுகளை பிரித்தார்கள். எனவே வார்டுகளை உண்மை யாக பிரித்து மக்கள் பிரதி நிதிகள் இடம்பெறச் செய்ய வேண்டும்.

அமைச்சர் ஆற்காடு வீராசாமி:- தாழ்த்தப்பட்டோர், பெண்கள் எவ்வளவு பேர் என்று கணக்கெடுப்பு நடத்தப் பட்டு வருகிறது. ஆனால் பிற் படுத்தப்பட்டோர் எவ்வளவு பேர் என்ற கணக்கெடுப்பு நடத்தவில்லை. அதை வைத்து தான் நீதிமன்றத்தில் தடை கேட்டார்கள்.

காலம் கடந்தது


எனவே இனி பிற்படுத்தப்பட் டோருக்கான கணக்கெடுப்பை நடத்தினால் 2 ஆண்டுகள் ஆகும். காலம் கடந்து தேர்தல் நடத்த இந்த அரசு விரும் பாததால் தாழ்த்தப்பட்டோர், பெண்களுக்கான இடஒதுக் கீட்டுடன் தேர்தலை நடத்து கிறது.

கணக்கெடுப்பு

தீரன் (பா.ம.க):- எதிர்காலத் திலாவது கணக்கெடுப்பு நடத்தி பிற்படுத்தப்பட்டவர் களுக்கு வாய்ப்பு தர வேண் டும்.

தலைவர் தேர்தலில் கட்சி சின்னம் இல்லாத நிலையில் ஒன்றிய, மாவட்ட தலைவர்கள் கட்சி சின்னம் வைக்க அனுமதிக்கலாம்.

லத்தீப் (தேசிய லீக்):- வார்டு களை முறையாக பிரிக்க அரசு முன்வர வேண்டும். பல இடங் களில் வாக்காளர்கள் விடுபட்டு இருக்கிறார்கள். விடுப்பட்டவர் களை பட்டியலில் சேர்க்க



கோ.சி.மணி

வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

டாக்டர் கிருஷ்ணசாமி, ஏ.எஸ்.பொன்னம்மாள், டி. மணி, ஜி.கே.மணி, சொக்கர் ஆகியோரும் பேசினார்கள்.

எதிர்ப்பு ஏன்?

விவாதத்திற்கு பதிலளித்து உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி பேசியதாவது:-

இந்த சட்ட திருத்தத்தை திருநாவுக்கரசு எதிர்க்க வில்லை. தனி அதிகாரிகள் பதவிக்காலம் நீட்டிப்பதைத் தான் எதிர்க்கிறார்.

திருநாவுக்கரசு:- இடஒதுக் கீடு இல்லை என்பதற்காகவே எதிர்க்கிறேன்.

அமைச்சர் கோ.சி.மணி:- ஊராட்சி தேர்தல் இப்போது தேவையில்லை என்று கருது கிறார்.

திருநாவுக்கரசு:- தேர்தல் வேண்டாம் என்று நான் கூறிய தாக சொல்வது தவறு. சீக் கிரம் தேர்தலை நடத்துங்கள்.

ஆசை

அமைச்சர் கோ.சி.மணி:- எல்லா உறுப்பினர்களும் கட்சி வித்தியாசம் இன்றி உள்ளாட்சி தேர்தல் நடப்பதை பார்க்க வேண்டும் என்ற ஆசையில் இருக்கிறார்கள்.

முதலமைச்சர் ஆணையின் படி எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரை வில் தேர்தலை அறிவித்து இருக்கிறோம்.

இடஒதுக்கீடு இல்லாவிட்டா லும் பிற்பட்டோர் எண்ணிக்கை நிச்சயம் அதிகரிக்கும். ஒதுக் கீடு இல்லாத காலத்தில்கூட பிற்பட்டோர் பிரதிநிதிகள் எண்ணிக்கை குறையவில்லை.

எண்ணிக்கை

பிற்படுத்தப்பட்டோர் எண் ணிக்கை குறையாத அளவுக்கு கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்தினால் பிற்படுத்தப்பட் டோர் பிரதிநிதிகள் எண் ணிக்கை குறையாது. நாணய மாக, நாகரிகமான முறையில் வழக்குக்கு போகாத வகையில் சட்ட முறையில் நடத்தவே இந்த தேர்தல் நடைபெறு கிறது.

விடுபட்டுப்போன வாக்காளர் களை சேர்க்க தேர்தல் ஆணை யத்தின் மூலம் எல்லா கட்சி களுக்கும் தாக்கீது செய்து நாள் குறிப்பிட்டு விளம்பரம் செய்யப் படும். அந்த நாளில் விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் பணியில் எல்லா கட்சிகளும் ஈடுபட்டு மக்கள் பயன்பெறச் செய்ய வேண்டும்.

வார்டு பிரிப்பதில் தவறு என்று கூறினார்கள். அந்த அடிப்படையில் அவை பரிசீலிக்கப்படும்.

கட்சி சின்னம்

கட்சி சின்னம் தர வேண்டும் என்று கூறினார்கள். அந்த கருத்தும் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமைச்சரின் பதிலுக்கு பிறகு மசோதா நிறைவேறியது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS